பின்வரும் சலுகைகள், சாஸ் மருந்தகங்களில் கிடைக்கப்பெறும்

விவரங்கள் ஜனவரி 2024 நிலவரப்படி சரியானவை.

| CHAS திட்டத்தின் தகுதி விதிகள் | CHAS | CHAS | CHAS | Merdeka Generation | pioneer |
|---|---|---|---|---|---|
| ஒவ்வொரு நபருக்கான வீட்டு மாத வருமானம் (வருமானம் உள்ள குடும்பங்களுக்கு) | $2,000–க்கு மேல் | $1,201 – $2,000 | $1,200 மற்றும் அதற்கும் குறைவு | மெர்டேக்கா தலைமுறையினர் அனைவருக்கும், வருமானம் அல்லது வீட்டின் ஆண்டு மதிப்பு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், CHAS அனுகூலங்கள் வழங்கப்படும். | முன்னோடிகள் அனைவருக்கும், வருமானம் அல்லது வீட்டின் ஆண்டு மதிப்பு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், CHAS அனுகூலங்கள் வழங்கப்படும். |
| வீட்டின் ஆண்டு மதிப்பு (வருமானம் எதுவும் இல்லாத குடும்பங்களுக்கு) | $25,000–க்கு மேல் | $21,001 – $25,000 | $21,000 மற்றும் அதற்கும் குறைவு | | |
| **CHAS கட்டணச்சலுகைகள்** | | | | | |
| சாதாரண நோய்கள் [1] | பொருந்தாது | ஒவ்வொரு வருகைக்கும் $10 வரையிலான கட்டணச்சலுகை | ஒவ்வொரு வருகைக்கும் $18.50 வரையிலான கட்டணச்சலுகை | ஒவ்வொரு வருகைக்கும் $23.50 வரையிலான கட்டணச்சலுகை | ஒவ்வொரு வருகைக்கும் $28.50 வரையிலான கட்டணச்சலுகை |
| குறிப்பிட்ட நாட்பட்ட நோய்கள் – சிக்கலற்றது [2] | ஒவ்வொரு வருகைக்கும் $28 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $112 | ஒவ்வொரு வருகைக்கும் $50 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $200 | ஒவ்வொரு வருகைக்கும் $80 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $320 | ஒவ்வொரு வருகைக்கும் $85 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $340 | ஒவ்வொரு வருகைக்கும் $90 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $360 |
| குறிப்பிட்ட நாட்பட்ட நோய்கள் – சிக்கலானது [2] | ஒவ்வொரு வருகைக்கும் $40 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $160 | ஒவ்வொரு வருகைக்கும் $80 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $320 | ஒவ்வொரு வருகைக்கும் $125 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $500 | ஒவ்வொரு வருகைக்கும் $130 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $520 | ஒவ்வொரு வருகைக்கும் $135 வரையிலான கட்டணச்சலுகை, அதிகபட்சமாக ஆண்டுக்கு $540 |
| குறிப்பிட்ட பல் மருத்துவச் சேவைகள் | பொருந்தாது | ஒவ்வொரு சிகிச்சைக்கும் $50 முதல் $170.50 வரையிலான கட்டணச்சலுகை (செயற்கைப் பல்வரிசை, பற்சிகரம், பல்வேர்க்குழி சிகிச்சை ஆகியவற்றுக்கு மட்டுமே) | ஒவ்வொரு சிகிச்சைக்கும் $11 முதல் $256.50 வரையிலான கட்டணச்சலுகை (சிகிச்சையைப் பொறுத்தது) | ஒவ்வொரு சிகிச்சைக்கும் $16 முதல் $261.50 வரையிலான கட்டணச்சலுகை (சிகிச்சையைப் பொறுத்தது) | ஒவ்வொரு சிகிச்சைக்கும் $21 முதல் $266.50 வரையிலான கட்டணச்சலுகை (சிகிச்சையைப் பொறுத்தது) |
| வாழ்நாளுக்கான பரிசோதனையின்கீழ் பரிந்துரைக்கப்பட்ட சுகாதாரப் பரிசோதனை [3] | தகுதிபெறும் சிங்கப்பூரர்களுக்கு $5 நிலையான கட்டணம் | தகுதிபெறும் சிங்கப்பூரர்களுக்கு $2 நிலையான கட்டணம் | தகுதிபெறும் சிங்கப்பூரர்களுக்கு $2 நிலையான கட்டணம் | தகுதிபெறும் மூத்தோருக்கு $2 நிலையான கட்டணம் | தகுதிபெறும் மூத்தோருக்கு இலவசம் |
| தேசிய அளவில் பரிந்துரைக்கப்படும் தடுப்பூசிகள் [4] | தேசிய வயதுவந்தோர் தடுப்பூசி அட்டவணை, தேசிய பிள்ளைப்பருவ தடுப்பூசி அட்டவணை ஆகியவற்றின் தடுப்பூசி போட்டுக்கொள்வதற்கான தகுதி நிபந்தனைகளுக்கு உட்பட்ட சிங்கப்பூர் குடிமக்கள், தேசிய அளவில் பரிந்துரைக்கப்படும் தடுப்பூசிகளுக்கான நிதியுதவிகளுக்குத் தகுதிபெறுவர். | | | | |
| பிள்ளைப் பருவ வளர்ச்சி பரிசோதனை | சிங்கப்பூரில் பரிந்துரைக்கப்படும் இடங்களில் பிள்ளைப்பருவ வளர்ச்சிப் பரிசோதனைகளுக்குச் செல்லும் அனைத்து சிங்கப்பூர் பிள்ளைகளும் (0 முதல் 6 வயது வரையில்) நிதியுதவிகளுக்குத் தகுதிபெறுவர். | | | பொருந்தாது | பொருந்தாது |

[1] ஒவ்வொரு நோயாளியும் ஒவ்வொரு நாள்காட்டி ஆண்டிலும், சாதாரண நோய்களுக்காக எல்லா CHAS மருந்தகங்களுக்கும் அதிகபட்சம் 24 முறை வருகையளிக்கலாம்.

[2] "சிக்கலற்றது" என்பது ஒரே ஒரு நாட்பட்ட நோய்க்காக வருகையளிப்பதைக் குறிக்கிறது. "சிக்கலானது" என்பது பற்பல நாட்பட்ட நோய்களுக்காக, அல்லது பல்வேறு சிக்கல்கள் உள்ள ஒரே ஒரு நாட்பட்ட நோய்க்காக வருகையளிப்பதைக் குறிக்கிறது.

[3] இது பரிசோதனை(கள்), பரிசோதனைக்குப் பிந்திய முதல் மருத்துவ சந்திப்பு ஆகியவற்றுக்கான செலவைக் குறிக்கின்றது. இருதய நோய், கருப்பைப் புற்றுநோய், பெருங்குடல் புற்றுநோய் ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் இந்தத் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன. நீங்கள், இந்த விரைவுத் தகவல் குறியீட்டின் வழி, உங்களுடைய தகுதியுடைமை நிலையை சரிபார்த்துக்கொள்ளலாம்.

[4] தடுப்பூசிகள் பற்றிய மேல் விவரங்களுக்கு, தயவுசெய்து www.healthhub.sg/vaccinate இணையப்பக்கத்திற்கு செல்லுங்கள். குறிப்பிட்ட தடுப்பூசி வகைகளுக்கு, சலுகைகள் பொருந்தும்.

CHAS COMMUNITY HEALTH ASSIST SCHEME

## நாம் அனைவருமே இப்போது CHAS திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்!

சிங்கப்பூர் குடிமக்கள் அனைவரும் பங்குபெறும் பொது மருந்தகங்களில் நாட்பட்ட நோய்களுக்குக் கட்டணச்சலுகைகள் பெறலாம்.




**CHAS திட்டம் இப்போது 23 நாட்பட்ட நோய்களை உள்ளடக்குகிறது!**

ஒவ்வாமை நாசியழற்சி, நாட்பட்ட கல்லீரல் அழற்சி, கீல்வாதம் உட்பட



# CHAS திட்டத்தின் விவரம்

சிங்கப்பூர் குடிமக்கள் தங்கள் வீட்டுக்கு அருகிலுள்ள பங்குபெறும் பொது மருந்தகங்களிலும் பல் சிகிச்சை மருந்தகங்களிலும் மருத்துவ மற்றும் பல் மருத்துவப் பராமரிப்புக்குக் கட்டணச்சலுகைகள் பெறுவதற்கு சமூக சுகாதார உதவித் திட்டம் (CHAS) துணை புரிகிறது.




CHAS, மெர்டேக்கா தலைமுறை, முன்னோடித் தலைமுறை அட்டைகள் வைத்திருப்போர், CHAS மருந்தகங்களுக்கு வருகையளிக்கும்போது தங்களது அடையாள அட்டையுடன் CHAS அட்டை, மெர்டேக்கா தலைமுறை அட்டை அல்லது முன்னோடித் தலைமுறை அட்டையைக் காண்பித்து, கட்டணச்சலுகைகளைப் பெறலாம்.




பதினைந்து வயதுக்குக் குறைவானவர்கள் தங்களது CHAS அட்டையுடன் பிறப்புச் சான்றிதழை / மாணவர் அடையாள அட்டையைக் காட்டவேண்டும்.

CHAS மருந்தகங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் CHAS ஒட்டுவில்லையைப் பார்த்து, மருந்தகங்களை எளிதில் அடையாளம் கண்டுகொள்ளலாம்.

## ஒவ்வொரு நபருக்கான வீட்டு மாத வருமானம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

குடும்பத்தின் மொத்த மாத வருமானத்தை*, சேர்ந்து வாழும் குடும்ப உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையால் வகுக்கவேண்டும்**.

### எடுத்துக்காட்டாக:

(குடும்பத்தின் மொத்த மாத வருமானம்)
மாதத்திற்கு
**$8,000**



÷

**4**
குடும்ப உறுப்பினர்கள்



=

மாதத்திற்கு
**$2,000**



* மொத்த மாத வருமானம் என்பது அடிப்படை வருமானம், மிகைநேர ஊதியம், செலவுத்தொகைகள், ரொக்கச் சன்மானங்கள், தரகு வருமானம், ஊக்கத்தொகை ஆகியவற்றைக் குறிக்கிறது.

** அடையாள அட்டையில் ஒரே முகவரியைக் கொண்டிருப்பதோடு, இரத்த பந்தம், திருமணம் அல்லது சட்டபூர்வ தத்தெடுப்பு மூலம் உறவினர்களாகக் கருதப்படும் குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

## CHAS திட்டத்தில் உள்ளடங்குவன

### நாட்பட்ட நோய்கள்

- ஒவ்வாமை நாசியழற்சி
- மனக்கலக்க நோய்+
- ஆஸ்த்மா
- கெடுதிகுறைவான ஆண்சுரப்பி வீக்கம்
- இருமனக் குறைபாடு+
- நாள்பட்ட கல்லீரல் அழற்சி (ஹெபடைடிஸ்பி)
- நாட்பட்ட நுரையீரல் அடைப்பு நோய்
- முதுமைக்கால மறதி நோய்
- நீரிழிவு நோய் (நீரிழிவு நோய்க்கான முந்திய நிலை உட்பட)
- வலிப்பு நோய்
- கீல்வாதம்
- உயர் இரத்த அழுத்தம்
- இதய நோய்
- இரத்தக்கொழுப்பு பிரச்சனைகள் (எ.கா. உயர் இரத்தக்கொழுப்பு)
- கடும் மனச்சோர்வு+
- நாட்பட்ட சிறுநீரக அழற்சி / சிறுநீரகப் பாதிப்பு
- முதுமை மூட்டழற்சி
- எலும்பு தேய்வு நோய்
- பார்கின்சன்ஸ் நோய்
- சருமத்தடிப்பு அழற்சி
- வாத மூட்டழற்சி
- மூளை முரண் நோய்+
- பக்கவாதம்

### சாதாரண நோய்கள்#

- வயிற்று வலி
- இருமல், சளி, சளிக்காய்ச்சல்
- வயிற்றுப்போக்கு
- காய்ச்சல்
- தலைவலி
- சருமத்தில் கிருமித்தொற்று மற்றும் தடிப்புகள்
- கண் வலி
- சிறுநீர்க்குழாயில் கிருமித்தொற்று

(இவற்றுடன் பட்டியல் முடிந்துவிடவில்லை)

### பல் மருத்துவச் சேவைகள்#

- பல் பிடுங்குதல்^
- ஓட்டையை அடைத்தல்^
- அகற்றத்தக்க செயற்கைப் பல்வரிசை
- செயற்கைப் பல்வரிசை சீரமைப்பு / பழுதுபார்ப்பு
- நிரந்தர பற்சிகரம்
- பற்காரை மறுபூச்சு^
- பல்வேர்க்குழி சிகிச்சை
- பற்களைப் பளபளப்பாக்குதல்^
- பற்கரை நீக்குதல்^
- பல்லுறுதி கூட்டும் புளோரைடு சிகிச்சை^
- ஊடுகதிர் படமெடுத்தல் (X-Ray)^

\# இந்த அட்டைக்குப் பொருந்தாது CHAS

\+ தேர்ந்தெடுக்கப்பட்ட மருந்தகங்களில் மட்டுமே கோர முடியும். மேலும் விவரம் அறிய அன்புகூர்ந்து 1800-275-2427 (1800-ASK-CHAS) எனும் CHAS நேரடித் தொலைபேசி சேவையை அழைக்கவும்.

^ இந்த அட்டைக்குப் பொருந்தாது CHAS

## CHAS திட்டத்தின் தகுதி விதிகள்

சிங்கப்பூர் குடிமக்கள் அனைவரும் CHAS திட்டத்திற்குத் தகுதி பெறுவார்கள். அனுகூலங்கள் பின்வருமாறு நிர்ணயிக்கப்படும்:

- தனிநபரின் மாதாந்தர சராசரி குடும்ப வருமானம் (வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்கு); அல்லது
- வீட்டின் ஆண்டு மதிப்பு (வருமானம் இல்லாத குடும்பங்களுக்கு).

## விண்ணப்பம் செய்வது எப்படி?

நீங்கள் **www.chas.sg** இணையத்தளத்திற்குச் சென்று உங்கள் குடும்பத்திற்கான விண்ணப்பத்தை இணையம்வழி சமர்ப்பிக்கலாம். மாறாக, ஏதாவதொரு சமூக நிலையம் அல்லது மன்றம், சமூக மேம்பாட்டு மன்றம், பொது மருத்துவமனை அல்லது பலதுறை மருந்தகத்தில் CHAS விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு விண்ணப்பப் படிவம் மட்டுமே தேவைப்படும்.

உங்கள் குடும்பத்திலுள்ள தகுதிபெறும் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் CHAS அட்டை கிடைக்கும்.

ஆண்டு மதிப்பு என்பது உங்கள் வீடு வாடகைக்கு விடப்பட்டிருந்தால் கிடைக்கக்கூடிய வருடாந்தர வாடகையாகும். ஆண்டு மதிப்பை சிங்கப்பூர் உள்நாட்டு வருவாய் ஆணையம் மதிப்பிடுகிறது.

மேல்விவரங்களுக்கு, கீழ்க்காணும் **QR** குறியீட்டை வருடி பார்க்கவும்
**www.chas.sg**

அல்லது அழைக்கவும்
**1800-275-2427**
(1800-**ASK-CHAS**)

agency for integrated care

MINISTRY OF HEALTH SINGAPORE